தொடரப்பட்டும், தர நிர்ணய அமைவன சட்டம் 1986-ன்கீழ் தீர்ப்புகள் பெறப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்த மூன்று ஆண்டுகளில் எட்டு மின் சாதன விற்பனைக் கடைகளில் ஐஎஸ்ஐ. முத்திரை பெறாமல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.30,680/- மதிப்புள்ள 85 மின் சாதனப் பொருட்கள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

123—

சொந்தக் கட்டடம்

***42372—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று நீராய் ஆயிரம் தலைவர்கள் வந்தாலும், ஊற்று நீராய் வந்து உலகத் தமிழர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் உழைப்பின் சிகரமே, (மேசையைத் தட்டும் ஒலி) உன்னதத் தலைவியே, நான் வணங்கும் தெய்வம் அம்மா அவர்களே, இந்திய தேசமே வியந்து நோக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்திட, காயங்கள் சுமந்து, கண்ணீர் துளிகளால் வளர்த்து, தொண்டர்களின் குருதியெல்லாம் உணர்வுகளால் நிரம்பித் ததும்ப உழைத்து, உழைத்து, தன்னலத்தில் நிற்காமல் தமிழர் நலன் ஒன்றே தலையாய கடமையாய், நாடே வணங்குகின்ற நற்றமிழ் அரசியே, (மேசையைத் தட்டும் ஒலி), நல்ல தமிழ் சொல்லாட்சியே, நக்கீரச் சிந்தனையே, வீடெல்லாம் மணந்து நிற்கும் 'அம்மா உணவகம்' தந்த மணிமேகலையே, பாரெல்லாம் போற்றுகின்ற பாரதப் புகழரசியே, பண்பாளர், படைப்பாளர், உழைப்பாளர் நெஞ்சமெல்லாம் இருக்கின்ற, இனிக்கின்ற எங்கள் குல தெய்வமே, நித்தம், நித்தம் நான் வணங்கும் எங்கள் அன்னையே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியில் ஆறு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. இரண்டு மையங்கள் பழுதடைந்த, பழைய அரசு கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள இரண்டு மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வெள்ளக்குட்டை ஊராட்சி 5,500 வாக்காளர்களையும், 9,000 மக்கள் தொகையையும் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். எனவே, மையங்களிலுள்ள குழந்தைகளின் நலன் கருதி, அரசுமூலம் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் அனைத்து*

மாவட்டங்களிலும், எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகையில்லா கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ, அவையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று ஆணையிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து, சொந்தக் கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்வதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே, கேட்டது கிடைக்கும் என்று வரமளித்த மாட்சிமை தாங்கிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

சேமிப்புக் கிடங்கு

***2590—திரு. க. குணசேகரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?